
# சாமர்த்தியச் சடங்கு



தொகுப்பு

சு.சிவரெத்தினம்

# சாமர்த்தியச் சடங்கு






நூற்தரவு:-

நூலின் பெயர் : சாமத்தியச் சடங்கு
வகை : சமூகவியல்
தொகுப்பாசிரியர் : சு.சிவரெத்தினம்
மொழி : தமிழ்
பதிப்பு : 2015
பக்கங்கள் : 28
பிரதிகள் : 500
நூல் பதிப்பு : மாருதி அச்சகம், 0778842223
அட்டைப்படம் : திரு.ஈ.குலராஜ்
அட்டைப்பட வடிவமைப்பு : திரு.அருள் சஞ்ஜித்

அறிமுகம் :

# காலம் என்பது கறங்கு போல் சுழல்வது

"காலம் என்பது கறங்கு போல் சுழன்று
மேலது கீழாய் கீழது மேலாய்
மாறிடும் தோற்றம்"

என ஒரு தமிழ்க் கவிஞர் பாடியுள்ளார். மனித இனம் தோன்றி 10 லட்சம் வருடங்களுக்கு மேலாகி விட்டதென்பர். விலங்குகளோடு ஒரு விலங்காக வாழ்ந்த மானுடர் உழைப்பினாலும், சிந்தனை வளர்சியினாலும் விலங்குலகினின்று விலகி மனித உலகினுள் புகுந்த காலம் தொட்டு இன்றுவரை எத்தனையோ மாற்றங்களைக் கண்டு வளர்ந்துள்ளனர். வாழ்தல் என்பதே அவர்களது இருப்பாகும். வரலாற்றுப்போக்கில் வாழ்தல் மூலம் அவர்கள் பெற்ற வாழ்தல் அனுபவங்களே பண்பாடுகளாயின. வாழ்க்கை மாற மாற பண்பாடுகளும் மாறுகின்றன என அறியாமலே மாறின. சூழலுக்குத் தக அதனை மாற்றி வடிவமைத்து அதனையே பண்பாடு என ஏற்று மனித குலம் வாழ்ந்து வருகிறது. காலம் என்பது கறங்குபோல் சுழல்கிறது. எங்கணும் மாற்றம் நிகழ்கிறது விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளும், எலக்ரோனிக் யுகமும் சர்வதேசக் கம்பனிகள் ஏற்படுத்திய நுகர்வுக் கலாசாரமும் அதனடியாக எழும் உலகமயமாக்கமும் 21 ஆம் நூற்றண்டில் மானுட வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

கீழைத்தேய உலகைத் தனது வலைப் பின்னலுள் உலகமயமாக்கம் உள்ளிழுத்துக் கொண்டது. சிக்கிக் கொண்ட கீழைத்தேய உலகு அலமந்து போனது. இந்த மாற்றத்தின் ஆணிவேர்களை அறியாது அதன்பின் அள்ளுண்டு போனோரே மிக அதிகம். அதனை எதிர்த்து மரபு பேசி மரபைக் காக்கமுயன்றோர் சிலர். மரபைப் புரிந்து கொண்டு அதனை நவீனத்துக்கு ஏற்ப விளக்கவும் வளர்க்கவும் முயன்றோர் சிலர்.

இவ்வெளியீட்டில் இரண்டு கட்டுரைகளை எழுதியுள்ள சிவரெத்தினமும், சந்திரசேகரமும் இவர்களுள் மூன்றாவது பிரிவினுள் வருகின்றனர். சிவரெத்தினத்தின் கட்டுரை சாமர்த்தியச் சடங்கும் அதன் சமூகத் தளமும் என்பதாகும். இதில் அவர் சாமர்த்தியச் சடங்கு பற்றிய பொதுவான இன்றைய அபிப்பிராயங்களைத் தந்து அதன் சமூகத் தளத்தை காட்டுகிறார். பூர்சுவா கலாசாரத்தால் அழிக்கப்பட்ட ஆன்மீகச் செல்வங்களை மனித குலம் திரும்பப் பெறுவதற்கான போராட்டத்தை கூறுவதுடன், தமிழர்களிடத்தில் காணப்பட்ட நன்றியுணர்வும் விருந்தோம்பலுமே சாமர்த்தியச் சடங்கின் இறுதி வைபவமான கொண்டாட்டமாக முடிகிறது என்கிறார்.

சந்திரசேகரத்தின் கட்டுரை தமிழரது உணவுப் பழக்க வழக்கங்கள் என்பதாகும். இதில் மட்டக்களப்பு தமிழரது உணவுப் பழக்க வழக்கங்களில் காணப்படும் அறிவியல் அர்த்தங்களை அவர் சுட்டிக்காட்டுகிறார். அர்த்தபாவத்தோடு அமைந்த மட்டக்களப்புத் தமிழரின் உணவு முறைகளை அவர் வர்ணிக்கையில் நமக்கு ஏக்கம்தான் மிஞ்சுகிறது.

பேராசிரியர் சி. மௌனகுரு

இரண்டுமே நம்மைச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகளாகும். சிவரெத்தினமும் சந்திரசேகரமும் எமது முன்நாள் மாணவர்கள். இந்நாள் ஆராய்ச்சி நண்பர்கள். ஒருவகையில் ஆராய்ச்சி இரட்டையர்கள். தமிழர் எதனையும் கொண்டாட்டமாகக் கொண்டாடும் மரபினைக் கொண்டவர்கள், பிறப்பு தொடக்கம் இறப்பு வரை எல்லாமே கொண்டாட்டம்தான். இக்கொண்டாட்டங்கள் சமூகத்தினை இணைப்பதுடன் பகிர்தல், மகிழ்தல், மதித்தல், உதவல், இன்புறல், போன்ற உயர்ந்த பண்புகளையும் கொண்டுள்ளது. இவ்வண்ணம் சேர்த்துவைத்த உயர்ந்த விழுமியங் களைத்தான் நாம் பண்பாடு என்கிறோம். சாமர்த்தியச் சடங்கு என நாம் பொதுவாக அழைக்கும் இச்சடங்கு மானுட வாழ்வின் மிக முக்கிய சடங்காகும். "பெண்ணின்றேல் மனித விருத்தியில்லை" விருத்தியைத் தரும் அப் பெண்ணைக் கொண்டாடும் சடங்காக இதனை மட்டக்களப்பில் நம்முன்னோர் வடிவமைத்தனர். புராதனகாலத்தில் ஒருவிதமாக வடிவமைக்கப் பட்ட இச் சடங்கு காலம்தோறும் மாறிவந்து இன்றைய இந்நிலைக்கு வந்துள்ளது. பிராமணீயக் கலாசாரமும் மேற்கு நாட்டுக் கலாசாரமும் இன்றைய தொழில் நுட்பக் கலா சாரமும் அதன் பழைய பண்புகளை

பெரிய பிள்ளையாதல், வயதுக்கு வரல், சாமர்த்தியமடைதல், பூப்படைதல், ருதுசாந்தி என நாம் இதனை அழைக்கும் போது ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் ஒரு வரலாற்று மாற்றமும் பண்பாட்டு மாற்றமும் இருக்கின்றது என்பதைப் பலர் அறியார்.

தனது அருமை மகளின் ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சியை அறிவு பூர்வமாக அணுகி அதனை இத்தகைய வகையில் அறிமுகம் செய்யும் சிவரத்தினம் நமது பெரு விருப்புக்கும் மதிப்புக்கும் உரியவராகிறார். ஒரு முன்னுதாரணமும் ஆகிறார். முக்கியமான ஒரு பாதையைத் தொடக்கி வைப்பவருக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புகள் கிடைப்பது இயல்பு. எதிர்ப்புகளை எதிர் கொண்டு முன்னோக்கிச் செல்லும் மனோவலிமை சிவரெத்தினத்துக்கு உண்டு. இதனை நான் அவரது மாணவப் பருவத்திலிருந்து நன்கு அறிவேன். சிவரெத்தினத்தைப் புரிந்து கொண்டு அவர் காரியம் யாவினும் கை கொடுப்பவர் அவர் மனைவி அருந்ததி. அருமையான பிள்ளைகள் லயஹரி, சிரோத்திலியன். இந்தக் குடும் பத்தோடு இணைந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்வடைகிறேன். அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

## தொகுப்புரை :

மட்டக்களப்பின் பாரம்பரிய பண்பாட்டினையும் அதன் நவீன தேவைப் பாடுகளையும் மாற்றங்களையும் அடிப் படையாகக் கொண்டு சரியான தத்துவார்த்த தளத்தில் ஒரு கட்டுரைத் தொகுப்பொன்றை வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதை ஒரு வரலாற்றுத் தேவையாக உணர்ந்திருந்த போதும் அது கைகூடாமல் காலம் இழுபட்டுக் கொண்டே சென்றது. இந் நிலையில்த்தான் எனது மகள் லயஹரி பருவமடைந்தாள். பிள்ளைகளைப் பெறுவதும் அவர்களின் ஒவ்வோர் கட்ட வளர்ச்சிகளும் மாற்றங்களும் எவ்வளவு சந்தோசத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஒரு பெற்றோராக உணர்ந்தோம். இந்த உணர்வு எமது பாரம்பரியம் எமக்கு கற்றுத்தந்ததா அல்லது பிள்ளைகளின் பாசத்தினால் ஏற்படுகிறதா என்பதை என்னால் கூறமுடியாது. ஆனால் எமது வாழ்வில் நாங்கள் இன்னொரு கட்டத்துக்குச் செல்கின்றோம் என்பதும் அந்தக் கட்டத்தாவுகை ஒரு சந்தோசத்தை ஏற்படுத்து கின்றது என்பதும் எங்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

எங்கள் உணர்வை, மகிழ்ச்சியை நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பகிர்ந்து கொள்வதில் ஒரு நூல்வேலித்தடை நாகரிகம் என்ற போர்வையில்சுற்றிக் கொண்டிருப் பதையும் அறியமுடிந்தது. எனவே அதனை நாங்கள் அறிவார்ந்து நோக்கி விளங்கிக் கொள்ளவதற்கு சாமர்த்தியச் சடங்கு எனும் கட்டுரைத்தொகுப்பை வெளிக் கொண்டு வருவதன் மூலம் நாகரிகத்தின் அரசியலையும் அதன் போலிமைகளையும் வெளிப் படுத்து வதுடன் எமது பண்பாட்டில் பெண்களுக்கிருந்த முக்கியத்துவம், குடும்பத்தின் ஜனநாய கத்தன்மை என்பவற்றையும் மீள்கண்டுபிடிப்புச் செய்து இளைய தலைமுறையினருக்குக் கூற வேண்டிய கடப்பாடும் உண்டு. பலரிடம் கட்டுரைகள் கேட்டபோதும் கலாநிதி சி. சந்திர சேகரம் அவர்கள் மாத்திரமே வழங்கியிருந்தார்.

கட்டுரைகள் இல்லை என்று முயற்சிக் காமல் இருப்பதிலும் பார்க்க எனது கட்டுரை யையும் கலாநிதி சி. சந்திரசேகரம் அவர்க ளுடைய கட்டுரையையும் சேர்த்து வெளியி டலாம் என்ற எண்ணத்துணிவின் பெறுபேறே இச்சிறு தொகுப்பாகும்.

இத்தொகுப்பிற்கு பலர் தங்கள் பங்க ளிப்பினை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களை நினைவு கூர்ந்து நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன். அந்தவகையில் நான் கட்டுரை கேட்டவுடன் வழங்கிய நண்பன் கலாநிதி.சி. சந்திரசேகரம், இதற்கு பொருத்தமான முன்னுரையை வழங்கிய எனது குரு பேராசிரியர் சி.மௌனகுரு, எனது உணர்வினை விளங்கிக்கொண்டு அதற்கு சரியான அட்டைப் படம் வரைந்து தந்த மூத்த ஓவியர் திரு.ஈ. குலராஜ், அட்டைப்படத்தினை வடிவமைத்துத் தந்த நண்பர் திரு. அருள் சஞ்ஜித் அத்துடன் எனது மகள் சிறுவயதில் வரைந்த ஓவியங்கள் சிலவற்றையும் உள்ளோவியங்களாக பயன்படுத்தியுள்ளேன், அவருக்கும் எனது நன்றிகள். கடைசி நேரத்தில் கொண்டு சென்று கொடுத்த போதும் அழகாக அச்சிட்ட மாருதி அச்சக உரிமையாளர் திருமதி மணிவண்ணன் மற்றும் அவரது ஊழியர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக என்னை ஓய்வாக இருந்து வாசிப் பதற்கும் எழுதுவதற்கும் அனுமதிக்கும் எனது மனைவி அருந்ததி, பிள்ளைகள் லயஹரி, சுரோத்திலியன் ஆகிய அனைவருக் கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.









# சாமர்த்தியச் சடங்கும் அதன் சமூகத்தளமும்

1975 களுக்கு முன்பு ஊர்களில் மின்சாரம், ரேப் றெக்கோடர், தொலைக்காட்சி என்பனவெல்லாம் இல்லை. ரேடியோகூட ஒரு சிலரின் வீடுகளில்த்தான் பார்க்கமுடியும். இந்தச் சூழலில் ஒரு பிள்ளை பருவமடைந்து விட்டால் ஓரளவு வசதியுள்ளவர்கள் ஒலி பெருக்கி எடுத்து 3 நாட்கள் கொண்டாடு வார்கள். அழைப்பிதழில் கூட ''கொண்டாட்டம் மூன்று நாட்கள் இடம்பெறும்" எனக் குறிப்பிடப் பட்டிருக்கும். அந்த மூன்று நாட்களும் அந்த வீட்டில் சாப்பாட்டுக்கு குறைவிருக்காது. வறிய, தாழ்த்தப்பட்ட மக்களின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதாகவும் இந்த நாட்கள் அமையும். இவ்வாறு ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாட்கள் கொண்டாட்டம் செய்து சாப்பாடு கொடுப்பது அந்தக் குடும் பத்துக்கு ஒரு சந்தோசமான விடயமாகவும் இருந்தது.

பொருளாதார ரீதியாக இவ்வாறு செய்ய முடியாதவர்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்றோ அன்றைய பொருளா தாரச் சூழ்நிலையில் ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாள் கொண்டாட்டம் செய்வது ஒரு ஆடம்பரமான விடயம் என்பதையோ எண்ணிப் பார்க்க முடியாத எனது சிறுவயதில், இவ்வா றான சடங்குகளுக்குச் சென்று விளையா டுவதும் ஒலிபெருக்கி இயக்கு பவரை நண்பனாக்கிக் கொண்டு நாங்கள் விரும்பும் எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களிலிருந்து ரி.எம். சௌந்தரராஜனின் பாடல்களை ஒலிபரப் பாக்கச் சொல்வதும் அப் பாடல் ஒலிபரப்பாகும் போது ஏதோ நாம்தான் இயற்றி, இசைய மைத்து பாடியது போல் ஒரு பிரம்மையை நண்பர்களுக்குக் காட்டுவதும், இரவானதும் எங்களைவிடப் பெரியவர்கள் ஒலிவாங்கியை எடுத்துப் பாடுவதும் அவர்களை ''நல்லா பாடுரயள் இன்னும் பாடுங்கோ" என அவர்களை ஏற்றிவிட்டு பாட்டைக் கேட்டுச் சிரிப்பதும் வழக்கமாகும். ரேடியோகூட இல்லாத அந்த நாட்களில் இவ்வாறு மூன்று நாட்களாக ஒலிபெருக்கியுடன் பொழுதைக் கழிப்பது இப்போதைய சிறுவர்கள் வீடியோ கேம்களில் பொழுதைக் கழிப்பது போன்றதாகும். அப்போது ஒரு பிள்ளை பருவமடைவதை கொண்டாட வேண்டுமா? வேண்டாமா என்கின்ற வாதங்களோ அல்லது இது ஏன் கொண்டாடப்படுகின்றது என்பது தொடர்பான விளக்கமோ நான் கேள்விப்பட்டது கிடையாது. கொண்டாட வசதியுள்ளவர்கள் கொண்டாடு வார்கள் வசதியற்றவர்கள் வீட்டுடனும் அவர்களது சுற்றத் தாருடனும் இந்தச் சடங்கை முடித்துக் கொள்வார்கள். இங்கு கொண்டாட்டம் என்பது வீட்டில் சமைத்து வருபவர்களுக்கு மனம் சந்தோசப்பட வயிறு நிறைய உணவு கொடுத்து விருந்தோம்பல் செய்வதேயாகும்.

1980 களுக்குப் பின்பு இந்தக் கொண்டாட்ட நிலையில் மாற்றம் ஏற்பட ஆரம்பிக்கின்றது. அதாவது ஒலிபெருக்கி எடுத்து மூன்று நாட்கள் கொண்டாட்டம் நடாத்துவது நாகரிகமானது அல்ல எனும் ஒரு கண்ணோட்டம் வளர ஆரம்பிக்கின்றது. இந்த வளர்ச்சியின் பயனாக இன்று சாமர்த்தியக் கலியாணம் தொடர்பாக மூன்று விதமான எண்ணக்கருக்கள் கொண்டவர்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சு.சிவரெத்தினம்

1. அழைப்பிதழ் அச்சடித்து அழைப்பு விடுத்து மண்டபங்களில் மதிய போசன விருந்துடன் நடாத்துபவர்கள்.

2. அழைப்பு விடுத்து மண்டபங்களில் நடாத்துவது நாகரிகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

3. பிள்ளை பருவமடைவது அந்தப் பிள்ளைக் குரிய தனிப்பட்ட அந்தரங்கமான விடய மாகும் இதனை மற்றவர்களுக்கு தெரியப் படுத்துவது காட்டுமிராண்டித் தனமாது என விட்டு விடுபவர்கள்.

## 1. அழைப்பிதழ் அச்சடித்து அழைப்பு விடுத்து மண்டபங்களில் மதிய போசன விருந்துடன் நடாத்துபவர்கள்:

இவ்வாறு நடத்துபவர்களில் பெரும் பாலானவர்கள் நாம் எதற்காகச் செய்கிறோம்? என்ன செய்கிறோம்? என்கின்ற எந்தப் பிரக்ஞையுமின்றி நாமும் எமது பிள்ளைக்குச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்கின்ற ஒரே நோக்கம் மட்டுமே உள்ளவர்கள். இந்த நோக்கத்துக்கா தமது பணத்தம்பட்டத்தையும் காட்டத்தவறமாட்டார்கள். உதாரணத்திற்கு மண்டபத்தில் கதிரைகள் இருந்தாலும் நட்சத்திர விடுதிகள் போல் இருக்கவேண்டும் என்பதற்காக துணியுடன் கூடிய கதிரைகளை வாடகைக்கு எடுப்பதும் புரியாணி என்ற பெயரில் அவியாச் சோற்றையும் அதனுடன் கலக்காத மாசிச் சம்பல், கோழிமுட்டை, கோழிப்பொரியல் என உடம்புக்கு ஒவ்வாத உணவை கோப்பையில் அரைவாசிக்குப் போட்டுக் கொடுப்பது அல்லது தாமாக எடுத்துக் கொள்ளல் (self-service) என்ற பெயரில் பிச்சைப் பாத்திரம் ஏந்துபவர் களாக விருந்தாளிகளை மாற்றுவது.அதிலும் கூட கோழிக்கும் அல்லது இறாலுக்கும் பங்கிடுவதற்கு ஒருவரை வைத்து விருந்தா ளியை கேவலப்படுத்துவது முதலான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதனை விட பிள்ளையை அலங்கரிப்பதற்கு, சினிமாப் பாணியிலமைந்த வீடியோ, புகைப்படம் எனப் பல இலட்சங்கள் செலவு செய்து விருந்தா ளியை அவர்களுடைய தம்பட்டங்களைப் பார்த்துச் செல்லும் ஒருவானாக ஆக்கும் சடங்காக சாமர்தியச் சடங்கு அமைகின்றது.

## 2. அழைப்பு விடுத்து மண்டபங்களில் நடாத்துவது நாகரிகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

இவ்வாறானவர்களில் பெரும் பாலானவர்கள் அரச உயர் பதவிகளில் வசிப்பதோடு காலனி யாதிக்க மனோபாவமும் சமஸ்கிருத மயப்பாடும் பண்பாட்டுப் பிரக்ஞையும் அற்றவர்கள். தமது பிள்ளை மற்றும் சொந்தக்காரர்களின் திருப்திக்காக தங்கள் சொந்தக்காரர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் அறிவித்து வீட்டோடு விருந்து கொடுத்து நடாத்தி முடிப்பவர்கள். இந்த அழைப்புக் கூட 'மஞ்சள் நீராட்டு விழா', 'ருதுசாந்தி அழைப் பிதழ்' என்றில்லாது வீட்டில் விருந்துக்கு வருமாறே அழைப்பு விடுக்கப் படுகின்றது. அதாவது 'மஞ்சள் நீராட்டு விழா' 'ருதுசாந்தி' எனக் கூறுவதே நாகரிகமானது அல்ல எனக் கருதுபவர்கள்.

## 3. பிள்ளை பருவமடைந்தது அந்தப் பிள்ளைக்குரிய தனிப்பட்ட அந்தரங் கமான விடயமாகும். இதனை மற்றவர் களுக்கு தெரியப் படுத்துவது காட்டு மிராண்டித் தமானது என விட்டு விடுபவர்கள்:

இந்த 3வது வகைப்பாட்டினுள் வருவபர்களில் பெரும்பாலானோர் உயர் வர்க்கத்தினரும்* பெண்ணியல் வாதிகளுமாவர். இவர்கள் இந்தச் சடங்கு தொடர்பாக முன்வைக்கும் விமர்சனங் கள் பின்வருமாறு அமைகின்றன:

1. சாமர்த்தியச் சடங்கு என்பது தமது மகள் மாரையே ஒரு கவர்ச்சிப் பொருளாகவும் பாலியல் பண்டமாகவும் காட்சிப்படுத்துவதாகும்.

2. பெண் உடலியல் ரீதியான மாற்றத்தால் பாலியல் உறவுக்குத் தயாராகும் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்ணை ஒரு பாலியல் பண்டமாக உணரப் பண்ணி மற்றவர்களுக்கும் அதனை தெரிவிக்கும் சடங்கு.

3. ஆண்களுக்கு சுகமளிப்பதற்கு பெண்ணை அடையாளப்படுத்தும் சடங்கு

4. "எனது பிள்ளை திருமணத்துக்கு தயாராகி விட்டாள்" என்பதை அறைகூவலாக விடுக்கின்ற ஒரு சடங்கு.

5. "எனது வீட்டிலும் ஒருத்தி தயாராக இருக்கின்றாள்" என்பதைக் காட்டிக் கொள்ளும் ஒரு சடங்கு.

இவற்றில் எந்தப் பெண்ணியல்வாதத் தளங்களும் இல்லாததோடு இவை ஆண் நிலைப்பட்ட வக்கிரத்தன்மையான சொல்லாடல்களாகவும் இருக்கின்றன. இந்த வக்கிரத் தன்மை என்பது அந்தப் பிள்ளையை ஆணுக்காக ஏங்கும் ஒரு பிண்டமாக, இன்பம் கொடுக்கும் ஒன்றாக, பயன்பாட்டுக்கான ஒன்றாகப் பார்த்து வரையறுப் பதாக இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று நிலையிலுள்ளவர்களுக்குமே இந்தச் சாமர்த்தியச் சடங்கின் அர்த்தத் தளங்கள், சமூகத்தேவை, சமூகச் செயற்பாடுகள், சமூக ஒருங்கிணைப்பு, சமூகப் பாதுகாப்பு என்பவை தொடர்பாக எந்தவிதமான அறிவும் அனுபவமும் இல்லாமல் இந்தச் சடங்கைச் செய்வதும், இந்தச் சடங்கை விமர்சிப்பதும் நடந்துகொண்டிருக்கின்றது. இது எமது சமூக முரண்நகையாகும்.

தமிழ் பண்பாட்டில் காலங்காலமாக பின்பற்றி வந்த ஒரு சடங்கு ஒரு புறம் அர்த்தமற்ற ஆடம்பரச் சடங்காக மாறியிருப்பதும் மறுபுறம் அநாகரிகமானது, காட்டுமிராண்டித்தனமானது என ஒதுக்கப் பட்டிருப்பதற்குமான கருத்துநிலை என்ன என அறிந்து சாமர்த்தியச் சடங்கின் சமூக, பொருளாதார உறவுநிலையை எடுத்துக்காட்டுவது அவசியமாகின்றது.



---

(Footnotes) * உயர் வர்க்கம் என்பது பெருமளவு பொருளாதாரத்தினைச் சார்ந்த ஒரு எண்ணக்கருவாக இருந்தபோதிலும் இங்கு அதனடியாக உருவாகின்ற கருத்தியல் தளம் சார்ந்தபண்பாடுகளைப் பேணுகின்றவர்களைக் குறிக்கின்றது. அதாவது பொருளாதாரரீதியாக உயர் வருமானத்தினைக் கொண்டவர்களாக இருந்தாலும் உயர்வர்க்க பண்பாட்டுக் கருத்தியலைக் கொண்டிராதவர்களை இப்பதம் குறிக்கவில்லை.

இன்று தமிழ் சமூகத்தில் ஆகமம் சாராக் கோயில்களிலும் பொதுவாழ்வியலிலும் பேணப்படும் சடங்குகள் புராதன வாழ்வின் எச்சங்களாக இருப்பதை மானிடவியலாளர் களும் சமூகவியலாளர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். அந்தவகையில் இன்றைய சாமர்த்தியச் சடங்கு எனும் எச்சம் அன்று எவ்வாறான சமூகச் செயற் பாட்டினுடைய தொடர்ச்சியாக காணப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ளுதல் அசியமாகின்றது.

வேட்டையாடல் சமூக நிலையில் மிருகத்துடன் போராடவேண்டியிருந்த மனிதன் விவசாய சமூகநிலைக்கு மாறுகின்றபோது இயற்கையுடன் போராடவேண்டியவனா கின்றான். வேட்டைக்கு உடல் வலிமையும் வேட்டையாடல் திறனுமே தேவையாக இருந்தது. இத் தேவைக்கேற்ற சடங்குகளே வேட்டைச் சமூகத்தில் நிகழ்த்தப்பட்டன. ஆனால் விவசாயச் சமூகத்துக்கு மாறியபோது வேட்டைக்காலச் சமூகச் சடங்குகள் பயனற்றுப் போயின.

விவசாயச் சமூகநிலையில் தன்னை விட புறச் சக்திகளைச் சார்ந்திருக்க வேண்டியவனானான். மழை, வெயில், வறட்சி, மண்வளம், செழிப்பு, நோய்த் தாக்கங்கள், விலங்குகளிடமிருந்து பாதுகாத்தல், சிறந்த அறுவடை என்பனவெல்லாம் புறக்காரணி களாகத் தொழிற்பட்டன. இவற்றை தன்வயப் படுத்தி தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இவற்றுக்கேற்ற சடங்குகளை உருவாக்கினான்.

"ஆநிரைகளை மேய்ப்பது, அவற்றிற்கு உணவு அளிப்பது, அவற்றை விருத்தி செய்வது ஆகிய தொழில்களைவிட விதைப்பு, உழவு, அறுவடை போன்ற தொழில்கள் தாமதமாக இடம்பெறுபவை, கடினமானவை, உறுதியற்றவை. இதற்குப் பொறுமை, தொலை நோக்கு, நம்பிக்கை ஆகியன வேண்டும்.

ஆரம்பகால விவசாயிகளுக்கு இது ஏன் அல்லது எவ்வாறு என்று தெரியாது. விதைப்பதிலிருந்து அறுப்பு வரைக்கும் உள்ள செயல்கள் அவர்களுக்கு மர்மமாகவே இருந்தன. மேலும் பின்தங்கிய உற்பத்திமுறை இடம்பெற்றிருந்தது. எனவே வெற்றி கிடைப்பது என்பது உறுதியற்று இருந்தது. ஆகையினால் இதற்கு பொறுமை, தொலைநோக்கு, நம்பிக்கை ஆகியன தேவைப் பட்டன (மேற்கோள், சட்டோ பாத்யாயா தேவி பிரசாத், 2010, பக் - 356).

விவசாய சமூகத்தில் இந்தத் தேவைப் பாட்டினை பூர்த்தி செய்பவளாக பெண் கருதப்பட்டாள். இதற்கான காரணம் பற்றி பட்டாச்சார்யா பின்வருமாறு விளக்குகின்றார்: "தங்கள் சொந்த அனுபவங்களின் அடிப் படையில் தங்களைச் சுற்றியுள்ள பொருள்களை அணுகி வாழ்க்கை குறித்த ஒரு நடைமுறைத் தத்துவத்தைப் பழங்கால மக்கள் உருவாக் கினார்கள். இம் முயற்சியில் அவர்களுக்குக் கிடைத்த ஒரே விதியாக 'ஒப்புமை' அல்லது 'ஒத்திசைவு' விதி (Principle of analogy) அமைந்தது. வேறுபட்ட பொருள்களுக்கிடையில் காணப்படும் சில பண்புக்கூறுகளின் ஒத்த தன்மையினை அடிப்படையாகக் கொண்டே இவ்விதி உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படை யில்தான் இயற்கை உற்பத்தியினை மனித உற்பத்தியின் பொருளிலே கண்டார்கள். இதன்படி மானுடத்தாயின் வடிவமாக பூமித்தாய் அமைந்தாள்.

ஒப்புமை விதியின் அடிப்படையில் நிலத்தின் செயற்பாடும் பெண்ணின் செயற்பாடும் இவ்வாறு பொருத்திப் பார்க்கப்பட்டது. குழந்தைப்பேறு என்ற செழிப்பினைப் பெண் வெளிப்படுத்துகிறாள்.

நிலம் பயிர்களின் செழிப்பிற்கு மூலாதாரமாய் அமைகிறது. எனவே, இருவகைச் செழிப்பின் சின்னமாகவும் பெண் கருதப்பட்டாள்.

இதன் விளைவாக மானிடச் செழிப்பைத் தோற்றுவிக்கும் பெண், தாவரச் செழிப்பை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவளாகவும் கருதப்பட்டாள்" (மேற்கோள், சிவசுப்பிரமணியன்.ஆ., 2010,பக்.56).

பெண்களின் கருவளமும் இயற்கையின் வளமும் சமமானவையாக நோக்கப்பட்டன. அதாவது இயற்கையின் விருத்தி பெண் இனவிருத்திக்குச் சமமாகப் பார்க்கப்படது. ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதைப் போல ஒரு பெண்ணால் வேளாண்மை செய்து அதன் விளைச்சலைப் பெற்றுத்தர முடியும் என நம்பப்பட்டது.

"வேளான் மந்திரத்தோடு" பெண்கள் மட்டுமே தொடர்புடையவர்கள் என்னும் பொதுவான கருத்துநிலையிலிருந்து தொடங்குவோம். பிரிபால்ட் இதனை சுருக்கமாகக் கூறுகிறார்.

நிலங்களைப் பயிரிடுவதற்கு இயல்பாகவே பெண்களுக்குத் தனித்திறமையுண்டு என்னும் வரையறைக்குள் அவற்றைச் செழிப்பிக்கச் செய்யவேண்டிய நோக்கத்துடன் மந்திரம் சார்ந்த சடங்குகள் செய்யப்பட்டன.

ஏராளமான தகவல்களின் அடிப்படையில் இதனை விவாதிக்கிறார். நாம் ஒரு சில உதாரணங்களைத் தருவோம். சியரோலியோன் என்ற இடத்திலுள்ள ரருபா பெண்கள் குழுவின் தலையாயவேலை வயலில் தெளிப்தற்கான மருந்து அல்லது மந்திர வசியத்தைத் தயார் செய்வது ஆகும். இது செழிப்பைத் தருகிறது. செயன்னஸ்களின் நடனம் பற்றி அவர்கள் கூறுகிறார்கள். இளம், நடுத்தர வயதுப் பெண்கள் வட்டமாக நின்று நடனமாடினர். இந்த நடனத்துக்குத் தலைமை தாங்கிய பெண் தானியத்தின் புனிதமான கதிர் ஒன்றை கம்பில் கட்டி காதிலிருந்த துளையில் செருகி இருந்தாள். சியோக்ஸ் மக்களிடையே ஒவ்வொரு வசந்த காலத்திலும் நிலங்களின் வளமையை உறுதி செய்யும் ஏராளமான சடங்குகளைப் பெண்கள் செய்தனர்" (மேற்கோள், மேலது பக் 357-258).

ஓரினகோ இந்தியர்கள், அவர்கள் வீட்டுப் பெண்களை, கொளுத்தும் வெயிலில், குழந்தைகளை மார்பில் அணைத்தவாறு விதை விதைப்பதற்கு அனுப்புவதை ஒரு கத்தோலிக்கச் சாமியார் கண்டித்தார். அதற்கு அங்குள்ள ஆண்கள் பதிலளித்தார்கள். "அருட்தந்தையே, இவை உங்களுக்குப் புரியா, ஆகையினால் நீங்கள் சினமடைகிறீர்கள். பெண்கள்தாம் குழந்தைகளைச் சுமப்பவர்கள். நாங்கள் அல்ல. பெண்கள் விதைக்கும் போது சோளக்கதிர் இரண்டு, நான்காகிறது. யுக்காப்பயிர் ஒரு கூடை நிறையக் கிடைக்கிறது. இதே போன்று எல்லாமே பல்கிப் பெருகுகின்றன. இது ஏன்? ஏனென்றால் பெண்களுக்குத்தான் பிள்ளை பெறத் தெரியும். அவர்களுக்கு விதையை அதிகரிக்கத் தெரியும். அவர்களே விதைக்கட்டும் அவர்களுக்குத் தெரிந்தது எங்களுக்குத் தெரியாது" (மேலது, பக்.374).


விவசாய சமூகத்தில் இரண்டு வித உற்பத்திகளே பிரதானம் பெற்றிருந்தன. ஒன்று, உணவு உற்பத்தி, இரண்டு சந்ததி உற்பத்தி. இவை இரண்டுக்கும் அடிப்படையாக பெண் இருந்தாள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

"இருவகைச் செழிப்பின் சின்னமாகவும் பெண் கருதப்பட்டமையாலேயே செழிப்புத் தெய்வங்களாகப் பெண் தெய்வங்கள் அமைந்து தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்ந்தது. அத்துடன் குழந்தை உற்பத்தியுடன் தொடர்புடைய பெண்குறியும் கருப்பையும் செழிப்பின் குறியீடாகவும் அமைந்தன. இதன்

விளைவாக பெண்குறி வழிபாடும் கருப்பையின் குறியீடான பூரணகடா (பூரண கும்பம்) வழிபாடும் தோன்றின" (சிவசுப்பிரமணியன்.ஆ., 2010,பக்.57). மனித இனவிருத்தி பெண்களின் மார் பகங்களில் ஆரம்பித்து வயிற்றை அடைந்து பிள்ளையைப் பெறுவதாக புராதன மனிதன் நம்பியிருக்க வேண்டும். இதன் காரணத்தினால் கற்காலத்து சிறிய கற்சிற் பங்களில் பருத்த மார்பும் வயிறும் கொண்டவர்களாக பெண்ணுருவங்கள் படைக் கப்பட்டன. இந்தக் கற்சிற்பங்களைப் படைத்த மனிதனுக்கு இவை கலை என்றோ அல்லது அவற்றின் குறியீட்டுப் பெறுமானங்கள் தொடர்பாகவோ எவ்வித உணர்வும் இருந்திருக் காது. அவை அவனுடைய சடங்குத் தேவை யினை பூர்த்தி செய்யும் பெண் தெய்வங்களாக படைக்கப் பட்டிருக்கவேண்டும். இந்தப் படைத்தலில் அவன் தனது உலகியல் நோக்கினை பதிவு செய்துள்ளான். இவை அவனுடைய வளத்தெய்வங்க ளாகும்.

"ஆனால் மனித இன விருத்தி பற்றிய இத்தகைய புரிதல் கட்டத்திலேயே மனிதகுலம் நின்றுவிடவில்லை. பெண் பிறப்புறுப்பு இதில் பெறும் பங்கு பற்றி அறிந்துகொள்ளும் நிலைக்கு மனிதன் முன்னேறினான். இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்டத்தில் முக்கியத்துவம் மார்பகங் களில் இருந்து பெண்ணின் பிறப்புறுப்பிற்கு மாறியது. ....... பண்டைக்காலத்து பெண் தெய்வங்களின் பிரபலமான சிறு சிலைகளிலிருந்து இது தெரியவருகிறது. இவற்றில் பெரும்பாலான வற்றில் பெண் பிறப்புறுப்பினை ஒரு முக்கோணமாகக் காட்டும் போக்கு இடம் பெற்றது" (தேவி பிரசாத் சட்டோபாத்யாயா, 2010, பக்.394) இந்த முக்கோணமே மந்திரங்களின் கருவியானயந்திரங்களின் அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன.

குறியீட்டு வடிவில் யந்திரங்களில் காணப்படும் பெண்குறியான முக்கோணம் பிற் கால வளர்ச்சியில் நேரடியாக பெண் குறியினை வெளிப்படுத்துவதாகவும் அது வழிபாட்டுக்குரிய தொன்றாகவும் மாறியிருக்கின்றது. தமிழ் நாட்டில் கும்பகோணத்திலுள்ள கோயிலில் 'சக்கராயி' எனும் பெண் தெய்வம் நிர்வாணமாக உட்கார்ந்த நிலையில் கால்களை அகலமாக விரித்துக் கொண்டு பெண்குறியினைக் காட்டிய வண்ணம் காட்சியளிக்கின்றது. தலைக்குப் பதிலாக தாமரை மலர் வடிவமைக்கப் பட்டுள்ளது. தாமரை மலர் செழிப்பினைக் காட்டுகின்ற வடிவமாக இந்திய மரபில்



பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இங்கு செழிப்பான மனிதகுல விருத்தியின் அடையாளமாக இத்தெய்வம் வணங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான வணக்கமுறைகள் உலகின் பலபகுதிகளிலும் உள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

யந்திரம், நேரடியான பெண்குறி என சித்தரித்து வழிபடுவது மாத்திரமன்றி கருப் பையை குறியீட்டு முறையில் வெளிப் படுத்துவதே கும்பமாகும். "'சத்பத பிரமாணா' என்னும் வட மொழி நூலில் கடா அல்லது கும்பம் தாய்த் தெய்வத்தின் கருப்பைக்குச் சமமாகக் கூறப்படுகிறது.

'கதா சரித்திர சாகா' என்னும் நூலில் கும்பம் அல்லது கடா கருப்பையாக ஐயமின்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாத் தாய்த் தெய்வங்களையும் முன்னிலைப்படுத்திக் கொண்டாடப்படும் நவராத்திரி என்னும் செழிப்பு விழாவானது கும்பம் ஒன்றை வைத்தே தொடங் குகிறது" (மேற்கோள் சிவசுப்பிர மணியன். ஆ. , 2010,பக்.59).


மித்திரா, வருணன் ஆகிய தேவர் களின் விந்து ஊற்றப்பட்ட கும்பத்திலிருந்தே வசிஷ்ட முனிவர் தோன்றியதாக ரிக் வேதம் குறிப்பிடுகிறது. (அகத்தியரும் கும்பத்தில் பிறந்ததாக கருதப்பட்டு கும்பமுனி என்ற ழைக்கப்படுகிறார்) மகாபாரதத்தில் கௌரவர் களும் அவர்களது சகோதரியும் அவர்களின் தாயான காந்தாரியின் வயிற்றிலிருந்து பிறந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. நெய் நிரம்பிய கும்பத்தில் அவர்களது வளர்ச்சிய டையாத கரு வைக்கப்பட்டு அதிலிருந்தே அவர்கள் தோன்றியதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மெசபடோமியா விலும் Ea என்னும் தெய்வத்தின் கையிலுள்ள கும்பத்திலிருந்து இரண்டு ஆறுகள் தோன்றுவது போல் சிலை அமைந்துள்ளது. (அகத்தியரின் கமண்டலத் திலிருந்தே காவிரியாறு தோன்றியதாக மணிமேகலை (பதிகம் 11-12) குறிப்பிடுகிறது.) இஸ்தர் என்ற பாபிலோனியப் பெண் தெய்வத் தின் சிலையிலும் செழிப்பின் சின்னமாகவும் கருப்பையின் குறியீடாகவும் கும்பமொன்றுள் ளது"(சிவசுப்பிரமணியன்.ஆ., 2010, பக்.59-60).

கும்பத்திலிருந்து ஆறு தோன்றினா லும் அந்த ஆறுகளும் தாய்மைப் பண்புடைய னவாக கொள்ளப் படுகின்றன. "தமிழர்கள் ஆறு, கடல் ஆகியவற்றை வளமைப் பண்புடைய பெண்ணாகக் கருதினார்கள் என்பதற்கு பல சான்றுகள் தரலாம்.

தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் காவிரி, வைகை போன்ற ஆறுகள் பெண்ணாகப் பாவிக்கப்பட்டு வருணிக்கப்படுவதைக் காணலாம்.

*"கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணும்*
*மிடைந்துசூழ் போகிய அகன்றேந் தல்குல்*
*வாலுகங் குவைஇய மலர்பூந் துருத்திப்*
*பால்புடைக் கொண்டு பன்மல ரோங்கி*
*எதிரெதிர் விளங்கிய கதிரிள வன்முலை*
*கரைநின் றுதிர்த்த காவிரிதழ்ச் செவ்வாய்*
*அருவி முல்லை அணிநகை யாட்டி*
*விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கயல் நெடுங்கண்*
*விரைமலர் நீங்கா அவிரறற் கூந்தல்*
*உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்*
*புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி*
*வையை யென்ற பொய்யாக் குலக்கொடி"*




என வையை ஆற்றினை வளமையான பெண்ணாகக் கற்பனை செய்கிறது சிலப்பதிகாரம். இது போன்ற பல சான்றுகளைத் தரலாம்" (முத்தையா.இ., 2013, பக்.122).

இவ்வாறு விவசாய உற்பத்தி முறையி னூடாக உருவாகி இற்றைவரை விவசாய உற்பத்தியினையே பெருமளவுக்குச் சார்ந்தி ருக்கும் தமிழ்ச் சமூகத்தில் பெண் தொடர்பான நம்பிக்கைகளும் சடங்குகளும் தவிர்க்க முடியாதவகையில் தொடரவே செய்யும். எமது பண்பாட்டின் அடையாளம் என்பதுவும் இவ்வாறான நம்பிக்கைகளினையும் சடங்கு களையும் கொண்ட ஒன்றாகவே காணப் படுகின்றது. இந்தவகையில் மட்டக்களப்பில் காணப்படும் பெருமளவான அம்மன் சடங்கு களும் குறிப்பாக மாரியம்மன் சடங்குகள் இந்த அடிப்படையில் உருவானவைகளேயாகும்.

மட்டக்களப்புச் சமூகம் விவசாய பொருளாதார உற்பத்தி உறவினையும் தாய்வழிச் சமூக நடைமுறைகளையும் கொண்ட ஒரு சமூகமாகும். இதனால் புராதன சமூக நடைமுறையின் எச்சங்களான வளச் சடங்குகள் தவிர்க்க முடியாதவைகளாக இருக்கின்றன. சாமர்த்தியச் சடங்கு எனப்படும் சடங்கும் ஒரு வளச்சடங்காகும். ஒரு பெண் பருவமடைவது அப் பெண் தாய்மை நிலைக் கான தகுதிப்பாட்டினை அடைந்துவிட்டாள் என்பதாகும். தாய்மை நிலை விவசாயத் துக்கும் அந்தக் குலத்தின் விருத்திக்கும் அடிப்படையாய் இருக்கின்றது. இதனை அந்தக் குடும்பம் தனது தனிப்பட்ட அந்தரங்க விடயமாகக் கருதுவது கிடையாது. ஏனெனில் அந்தப்பிள்ளை இப்போது பெற்றோர்களுக்கு மட்டுமுரியவள் அல்ல. அவள் அவளுடைய உறவினர் களுக்கும் உரியவள் ஆகின்றாள். அந்தக் குலத்தின் சொத்தாக மாறிவிடுகின்றாள். ஒரு பிள்ளை வயதுக்கு வந்துவிட்டது என்பதை தாயும் அந்தக் குடும்பத்தினரும் அறிந்தவுடன் அந்தப் பிள்ளையின் தகப்பன் வழியிலும் தாய்வழியிலும் உள்ள உறவினர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் அறியப் படுத்து வார்கள். சம்மந்தப்பட்டவர்களுக்கு செய்தி கிடைத்ததும் அவர்கள் அந்தச் செய்தியினால் மிக மகிழ்ச்சியடைந்து அந்தப் பிள்ளைக்குரிய பத்தியகால உணவான நல்லெண்ணெய் முட்டை என்பவற்றுடன் பிள்ளையின் வீடு வந்து சேர்ந்ததும் அன்று மாலை சுற்றத்தார்கள் சுற்றிவரச் சீலை பிடிக்க குரவை ஒலி எழுப்பி பட்டாசுகள் வெடித்து பிள்ளைக்கு தண்ணீர் ஊற்றுவார்கள். இதனை 'கண்ட தண்ணி வார்த்தல்' எனக் கூறுவார்கள்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பருவமடைந்த பிள்ளை அந்தச் சமூகத்துக் குரியவளாவதால் அந்தப் பிள்ளையின் பாது காப்பில் முழுச்சமூகமே பொறுப்பாகிறது. பருவமடையாத ஒரு பிள்ளையைச் சமூகம் பார்ப்பதற்கும் பருவமடைந்த ஒரு பிள்ளையைச் சமூகம் பார்ப்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. இந்தப் பார்வை பாலியல் சார்ந்ததல்ல உரிமையுடன் கூடிய பாதுகாப்புச் சார்ந்தது.



பிள்ளை பருவமடைந்து முதல் குறிப்பிட்ட காலம்வரை பிள்ளையின் உணவில் மிகக் கண்டிப்பான நடைமுறைகள் பின் பற்றப்படும். அதாவது வயதுக்கு வந்த முதல் மூன்று நாளும் காலையும் மாலையும் வேப் பெண்ணையும் நாட்டு முட்டையும் கொடுப்ப தோடு மதியத்தில் சோற்றுக்கு வெறும் முருங்கை இலை வறுவல் மாத்திரம் கொடுப்பார்கள். காலையிலும் மாலையிலும் பிள்ளைக்கு நல்லெண்ணை தேய்த்து எள்ளை மாவாக்கி வண்டு கட்டி பிட்டவித்து அந்தப் பிட்டை துணியில் கட்டி பிள்ளையின் உடம் பெல்லாம் ஒத்தணம் போட்டு பின்பு அந்த ஒத்தணப் பிட்டையே அவர் காலையும் மாலையும் சாப்பிடக் கொடுப்பார்கள். அத்துடன் மஞ்சள் அரைத்து உடம்பெல்லாம் பூசியும் விடுவார்கள். இந்தக் கடமையெல்லாம் அந்தத் தாய்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. அந்தப்பிள்ளையின் நலனில் அக்கறையுள்ள வர்களும் அனுபவமுள்ளவர்களும் விருப் பமுடன் வந்து இப்பணிகளைச் செய்வார்கள். இங்கு கொடுக்கப்படும் வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், நாட்டு முட்டை, எள்ளுப்பிட்டு என்பனவும் உடலில் பூசப்படும் மஞ்சளும் தமிழர்களின் புவியியல் சூழலில் விளைவன வாகவும், மருத்துவக் குணாம்சங்களைக் கொண்டனவாகவும் உடல் வலிமைக்குரியன வாகவும் காணப்படுகின்றன. இவை பெண்ணின் உடல் ஆரோக்கியம் தொடர்பாக அந்தக்காலச் சமூகம் எடுத்துக்கொண்ட அக்கறையின் வெளிப்பாடாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். கண்டதண்ணி வார்த்து முடிந்ததும் அந்தப் பிள்ளையை முக்காடிட்டு வீட்டுக்குள் அழைத்துச் செல்வார்கள். அந்தப் பிள்ளை அங்கு வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடியில் தன்னைப் பார்ப்பதோடு நிறைகுடத்தையும் (கும்பகுடம் அல்லது கும்பம்) பானை நிறைய சமைத்து வைத்திருக்கும் சோற்றையும் முதன்முதலில் பார்க்கவேண்டும். இந்தச் செயற்பாடுகளின் அர்த்தம் இங்கு ஏற்கனவே விளக்கியது போல் நேரடியானவை. அதாவது தரையில் நெல்லைப் பரப்பி அதன் மேல் வாய்ப்பகுதியில் தேங்காய் வைத்து அதனைச் சுற்றி மாவிலைகள் வைத்த சிறிய குடத்தினை (செம்பு) வைத்திருப்பார்கள். நிறைகுடத்தின் மேலுள்ள தேங்காயும் மாவி லையும் தாவரச் செழிப்பினை உணர்த்துகின்றன. குடமானது பெண்ணின் கருப்பையின் குறியீடாக அமைகிறது. நெல்லும் பானை நிறைய சமைக்கப் பட்ட சோறும் உணவு உற்பத்தியின் தன்னிறைவைக் காட்டுகின்றன. எனவே பருவமடைந்த ஒரு பெண் இவற்றைப் பார்ப்பதன் ஊடாக தாவரச் செழிப்பிலும் உணவு உற்பத்தியிலும் சந்ததிப் பெருக்கத்திலும் வளமுள்ளவளாக இருப்பாள் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்த வளம் காரணமாகத்தான் "தாந்திரீக பாரம்பரியத்தில் உந்தப்பட்டு, பஹா என்பது சத ஐஸ்வரியம் எனப்படும் ஆறு வகைப் பொருள்களின் முழுவளத்தைக் குறிப்பினைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். பெண்ணின் பிறப் புறுப்பினைக் குறிக்கும் இச்சொல் எவ்வாறு எல்லாவகையான செல்வங்களுக்கும் ஆதாரமாக உள்ளது என்று யாரும் கேள்வி கேட்பதில்லை. ஆனால் இது நல்ல கேள்வி. இதற்கு ஒரே விடைதான் உள்ளது. தொல்பழங்கால நம்பிக்கையின்படி பெண் பிறப்புறுப்புத்தான் எல்லாவ கையான செல்வங்களுக்கும் ஆதாரம் ஆகும்.

எனவே இந்த அடிப்படையிலே இந்தச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன. பிற்காலங்களில் இச்சடங்கில் ஆண்நிலை மயமாதலும் சமஸ்கிருதமயமாதலும் தாராளமா கவே உட்புகுந்திருக்கின்றன. அவற்றில் பிரதானமானது பருவமடைந்த பெண் தீட்டாகி விட்டாள் என ஒதுக்கி வைப்பது ஆண்நிலை மயமாதல் என்றால், அந்தத் தீட்டினைக் கழிப் பதற்காகச் செய்யப்படும் கழிப்புச் சடங்கு சமஸ் கிருதமாயமாதலாகும்.

இவையிரண்டுமே இச் சடங்கில் பெண்ணுக் கிருந்த முக்கியத்துவத்தினை இல்லாமல் செய்ததுமாகும்.

“தாயுரிமை தூக்கியெறியப்பட்டது பெண்ணினம் உலக வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வி ஆகும். ஆண் வீட்டிலும் ஆட்சியின் கடிவாளத்தைக் கைப்பற்றினான். பெண் இழி நிலைக்குத் தள்ளப்பட்டாள், அடிமைப்படுத்தப் பட்டாள், ஆணின் உடலின்ப வேட்கைக்குக் கருவியானாள், கேவலம் குழந்தைகளைப் பெறுகின்ற சாதனமாக ஆகி விட்டாள். இது பெண்களின் நிலையைக் கீழே இறக்கி விட்டது” (ஏங்கெல்ஸ் ஃபிரடெரிக், 2011, பக்.87).

“பண்டைக் காலத்திலும், மத்திய காலத்திலும் வாழ்ந்த இயற்கைவளம் சார்ந்த சிந்தனையாளர் களான அரிஸ்டாட்டில், பிளினி போன்றோர் மாதவிலக்கு நின்ற பின்னர் கருப்பையில் தேங்கியிருக்கும் இரத்தத்திலிருந்து கரு உருவாகிறது என்று கருதினார்கள். இதுவே உயிர் இரத்தம். எனவே இத்தகையவர்களை ஒதுக்கி வைப்பதற்குரிய (மாதவிலக்கு, பேறு காலத்திற்குப் பின்னர் அல்லது இவை சார்ந்தவேறு நிகழ்வுகள்) பொதுவான முறை அவர்கள் மீது இரத்தம் அல்லது சிவப்பு நிறக் குறியிடப்பட்டது. இந்தத் தடைக்குரிய இரட்டைத் தன்மைக்கு ஏற்ப, இந்த அடை யாளத்திற்கு இரண்டு பலன்கள் உண்டு. முதலாவதாக தொடர்பு கொள்ளாதிருத்தல், இரண்டாவதாக உயிர் சத்தினை ஊட்டுதல், மாதவிலக்கு ஆன பெண்கள் அல்லது கர்ப்பி ணிகள் அவர்கள் உடல்மீது காவிநிறப் பொடி தடவிக் கொண்டார்கள். இது ஆண்களுக்கு விலகியிருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தது. மேலும் பெண்களது வல்லமையைப் பெருக்குகிறது” (தேவி பிரசாத் சட்டோ பாத்யாயா, 2010, பக்.397).

‘மாதவிலக்கு’ என்கின்ற சொல்லுக் கான பொருளினையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். மாமொருமுறை பெண்ணுக்கு ஏற் படுகின்ற கருமுட்டை வெளியேறுகின்ற உடலியல் செயற்பாட்டுக்கும் ‘மாதவிலக்கு’ என்கின்ற சொல்லிற்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா? தொடர்பு இல்லையென்றால் தமிழ் பண்பாடும் அதனது மொழியும் இவ் உடலியல் செயற் பாட்டினை விளக்குவதற் கான ஒரு சொல்லினை உருவாக்கமுடியாத வளமற்ற ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததா என்பது எம் முன்னுள்ள கேள்வியாகும். நிட்சயமாக தமிழ் மொழி ஒரு வளமற்ற மொழி என எவரும் குறிப்பிட மாட்டார்கள். ஆகை யினால் ‘மாதவிலக்கு’ என்கின்ற சொல்லிற்கும் பெண்ணினுடைய உடலியல் செயற்பாட்டுக்கும் ஒரு இன்றியமையாத் தொடர்பு காணப் படுகின்றது. மாதவிலக்கு என்கின்ற சொல்லினை நாம் பிரிது நோக்குகின்றபோது மாதம் + வில க்கு என்று வரும். மாதம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தினைக் குறிப்பதாக



இருக்கின்ற அதேவேளை 'விலக்கு' என்பது ஏதோ ஒன்றை தவிர்த்துக்கொள் என கட்டளை யிடுவதாக இருக்கின்றது. இந்த இடத்தில் விலக்க வேண்டிய அந்த ஏதோ ஒன்று என்ன என்ற கேள்வி எழுகின்றது. பாலூட்டி விலங்குகளில் மனிதனைத் தவிர மற்ற எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே உடலுறவில் ஈடுபடுவதாக இருக்கும். மாட்டை எடுத்துக்கொண்டால் வருடத்துக்கு ஒரு முறையும் ஆடு வருடத்துக்கு இரண்டு முறையும் உடலுறவில் ஈடுபட்டு இனவிருத்தி செய்கின்றன. இடைப்பட்ட காலத்தில் அவை விலகியே இருக்கின்றன. ஆனால் மனிதன் இதற்கு எதிர்மாறாக மாதத்தில் பெருமளவு நாட்கள் உடலுறவில் ஈடுபட்டு சில நாட்கள் மாத்திரம் விலகியிருக்க வேண்டிய ஒரு சமநிலையை இயற்கை ஏற்படுத்தியுள்ளது. மாதம் ஒரு முறை பெண்ணுக்கு ஏற்படும் உடலுபாதைகள் அவளது உடலுறவு ஊக்கத்தை குறைப்ப தாகவும் உடல் வேதனையுடன் உடலுறவில் ஈடுபட முடியாமல் இருப்பதாலும் அவள் அக்குறிப் பிட்ட காலத்தில் தன்னை விலக்கிக் கொள்ளுமாறு ஆண்களுக்கு கட்டளையி டுகின்றாள். அதுவே இந்த 'விலக்கு' என்பதாகும். இந்தக் கட்டளையானது சில சைகைகள், குறியீடுகள், பழக் கவழக்கங்கள் மூலம் உணர்த்தப்படுகின்றன. அவற்றை உணர்ந்து கொண்ட ஆண்களும் அந்த நாட் களில் அவளுடனான உடலுறவை விலக்கி இருக்கின்றார்கள். இந்த பழக்கவழக்கங்கள் தற்போதைய தனிக்குடும்பம் அல்லது கூட்டுக் குடும்பம் என்னும் குடும்ப அமைப்பு தோன்று வதற்கு முன்னுள்ள நிலையாக இருக்க வேண்டும்.

எனவே இந்த 'மாதவிலக்கு' எனும் சொல் புராதன பெண்ணின் வாழ்வியலில் அவளது உடல் நலத்தினையும் அவளுடைய விருப்பத்தி னையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ் பண்பாட்டில் எழுந்த ஒரு அழகான பெண்ணிலை சார்ந்த சொல்லாக இருக்கின்றது.

தந்தை வழிமுறைச் சமுதாயத்தில் மதநிர்வாகத்தினைப் பெண்கள் இழந்து விட்டதனால், ................ அவளது பாலினப் பண்புகள் அசுத்தமானவை என்று கருதப்பட்டன. அவளது பெண் தன்மையே கண்டனத்துக் குள்ளாயிற்று. அவள் எல்லாப் பாவங்களுக்கும் காரணமாகிறாள். ஒரு ஏவாளாக, சூனியக் காரியாகக் கருதப்படுகிறாள்" (மேலது, பக். 396). தந்தைவழிச் சமுதாயத்துடன் இணைந்து அதனை மேலும் வளர்த்தெடுப்பதாக சமஸ்கிரு தமயமாக்கம் இடம்பெறலாயிற்று. இதனால் பெண்ணுடல் சார்ந்த இந்த விடயத்தினை தீட்டாக, பெண் ஒதுக்கப்பட வேண்டியவளாக கட்டமைத்தது.



நன்றிமறவாமையும் விருந்தோம்பலும் தமிழர் பண்பாட்டில் மிக முக்கியமான பண்பாட்டு விழுமியங்களாக இருந்து வந்துள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என செய்நன்றி பற்றியும்

*"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்"*

என விருந்தோம்பல் பற்றியும் திரு வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இது போலவே "சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி கண்ணகி தன் கணவனைப் பிரிந்ததால் வருந்தியதை விட, அறவோரையும், அந்தணரையும் விருந்தினால் சிறப்பிக்க முடியாததற் காகவே அதிகம் வருந்தியதாகக் கூறப்படுகின்றது.

*'அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்க் கோடலும் இழந்த என்னை'*

என்ற கண்ணகியின் கூற்று விருந்து ஒரு அறச் செயலாகத் தமிழ்ச் சமூகத்தில் மதிக்கப்பட்டது என்பதைப் புலப்படுத்து கின்றது" (முத்தையா. இ, 2013, பக். 54).

தமிழர்களிடத்தில் காணப்பட்ட இந்த நன்றியுணர்வும் விருந்தோம்பலுமே சாமர்த்தியச் சடங்கின் இறுதி வைபவமான கொண்டாட்டமாக முடிகின்றது. அதாவது ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பிள்ளையின் பருவமடைதலுக்கு பத்தியம் பார்க்கவந்தவர்களுக்கும் நல்லெண ணெய், முட்டை கொண்டு வந்தவர்களுக்கும் நண்பர்க ளுக்கும் நன்றியுணர்வுடன் அவர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுத்து, வீட்டில் விருந்தோம்பல் செய்வதாக இருந்தது. ஆரம்பகால சமூகப் பொருளாதார சூழ்நிலக்கு ஏற்ப இவ் வைபவங்கள் அமைந்திருந்தன.

இன்று கிழக்கைத் தவிர்ந்த ஏனைய தமிழ் பிரதேசங்களில் ஒரு சடங்குக்குச் சென்று அன்பழிப்புக்களைக் கொடுப்போர் தாங்கள் எவ்வளவு அல்லது எவ்வளவு பெறுமதியான அன்பளிப்பை வழங்கியிருக் கிறோம் என எழுதி வைத்துக் கொள்வதும் பெறுவோரும் தாங்கள் எவ்வளவை யாரிடம் இருந்து பெற்றோம் என எழுதிவைத்துக் கொண்டு அவற்றை அன்பழிப்புச் செய்தவர்களுக்கு மீளவும் வழங்குவதும் அவற்றை மீளவும் பெறுபவர் தான் கொடுத்த அன்பழிப்புக்கு நிகராகத்தான் வழங்கியுள்ளரா என பரீட்சித்துக் கொள்வதும் பொதுவான நடைமுறைகளாக இருக்கின்றன. மேலும் சடங்குகள் நடாத்த வாரிசுகள் இல்லாதோர் கொடுத்தவற்றை மீளவும் அறவிடுவதற் கென்றே வேறு வேறு பெயர்களில் சடங்குகளை நடாத்தி அறவீடுகளை மேற் கொள்கின்றனர்.

மட்டக்களப்புச் சமூக நடைமுறை களில் இவ்வாறான தன்மைகள் இல்லாததோடு அன்பழிப்புக் கொடுத்தவர்களுக்கு கட்டாயம் அழைப்புக் கொடுக்க வேண்டும் எனச் சிந்திப் பதும் கிடையாது. அழைப்புக் கொடுப்பது அவரவர் சூழ்நிலையைப் பொறுத்த விடயமாக அமைகிறது. எனவே இங்கு சடங்குகள் பணத்தை மையப் படுத்தியதாக செய்யப் படுவதும் இல்லை என்பதையே காட்டுகின்றது. இது இச் சமூகத்தின் பலமான விடயமாகும்.

இருந்தபோதும் இன்றைய சமூகப் பொருளாதார நிலைமைகளின் மாற்றம் காரணமாக கிழக்கிலும் வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுக்கும் நிலை மாறி கார்ட் அச்சிட்டு அழைப்பு விடுக்கும் முறையும் வீட்டில் இவ் வைபவத்தினை நாடாத்த முடியாத நிலையிலுள்ளோர் மண்டபங் களில் நடாத்துவதாகவும் மாறியிருக்கின்றது. இந்த மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவைகளாக இருந்தபோதும் எமது பண்பாட்டுக்கு மாறான

உணவுகளை பரிமாறுவதும் விருந்தாளியை கேவலப்படுத்துவதான நடவடிக்கைகளும் ஆடம்பரமான செலவுகளும் தவிர்க்கப்பட வேண்டியவைகளாகும்.

கண்ட தண்ணிவார்த்தலுடன் ஆரம்பிக்கும் இந்தச் சாமத்தியச் சடங்கு 30 நாட்களாக அந்தச் சமூகத்தில் பல சமூக ஒருங்கிணைப்பினையும் சமூகமயமாக்கத்தினையும் மேற்கொள்கின்றது. உற்றார் உறவினர்கள் தங்களுக்குள் இருந்த மனக் கசப்புகளை மறந்து ஒன்று கூடி மகிழ்வதும் பெரியவர்களை கனம் பண்ணி மரியாதை செலுத்துவதும் வீட்டுக்கு வந்தோரை விருப்புடன் விருந்தோம்பல் செய்வதுமான சமூக நடைமுறைகள் ஒரு சமூக உயிரிக்கு அடிப்படையான விடயங்களாகும். இந்த அடிப்படைகளைப் பயிற்றுவிக்கும் மையங்களாக இவ்வாறான சடங்குகள் காணப்படுகின்றன. தற்போதைய ஊடக உலகும் வெகுஜனப் பண்பாடும் சமஸ்கிருத மயமாதலும் புதிய கோட்பாடுகளும் இவற்றை மூடநம்பிக்கைகளாகவும் அநாகரிகமான செயற் பாடுகளாகவும் கட்டமைத்து தாக்குகின்றன. மற்றவர்களுடைய மூடநம்பிக்கை பற்றியும் அநாகரிகம் பற்றியும் பேசுபவர்கள் தாங்கள் எவ்வாறான நம்பிக்கைகளால் கட்டுண்டுகிடக்கிறோம் என்பது பற்றியோ அல்லது தங்களுடைய நடவடிக்கைகளில் காணப்படும் அநாகரிகத்தன்மை பற்றியோ எவ்வித பகுத்தறிவுத்தனமான சிந்தனைகளுமின்றி பேசுகின்றனர். ஒரு வருடைய நம்பிக்கைகள், பழக்கவழக்கள் தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கும் விமர்சிப்பதற்கும் மற்றவர்களுக்கு என்ன தகுதி உண்டு என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

ஒரு காலத்தில் நம்பிக்கையாக இருந்த விடயங்கள் இன்னொரு காலத்தில் மூட நம்பிக்கையாய் மாறிவிடுவதும் ஒரு பண்பாட்டினருக்கு நம்பிக்கையாய் இருப்பது அதே சமகாலத்தில் இன்னொரு பண்பாட்டி னருக்கு மூடநம்பிக்கையாய் இருப்பதுமான பல உதாரணங்களைக் காட்டமுடியும்.

உதாரணத்துக்கு பெரியபோரதீவு பத்திரகாளி அம்மன் கோயில் இறுதிச்சடங்கின் போது அதிகளவான ஆடுகள், கோழிகள் பலியிடப் படுவது வழக்கமாக இருந்து வந்தது. இன்று அவை மூடநம்பிக்கைகளாக மாறி பலியிடலே இல்லாமல் போய்விட்டது. அது போன்று இந்துக்களுக்குப் புனிதமான பசு அல்லது எருது இஸ்லாமியர்களுக்கு உணவாகின்றது.

எனவே மூடநம்பிக்கை பழங்காலப் பழக்கவழக்கங்கள் எனக் கூறுவோர் தங்களுடைய நாளாந்த இறைவழி பாட்டிலிருந்து ஆலயங்களில் பக்தியுடன் தீர்த்தமாடுவது, இறந்தோருக்கு செய்யும் கடமைகள் என அத்தனையையும் புறந்தள்ளிவிட்டு பெரியார் போன்று வாழவேண்டும். அவ்வாறு வாழ்பவர்களுக்கு மாத்திரமே இச்சடங்கினையும் விமர்ச்சிக்கின்ற தகுதிப் பாட்டையுடையவர்களாவார்கள்.

எனவே நம்பிக்கை, மூடநம்பிக்கை, நாகரிகம், அநாகரிகம் என்பனவெல்லாம் நாம் நாம் சார்ந்திருக்கின்ற காலத்தினையும் கருத்தியல் தளத்தினையும் சார்ந்த ஒரு சார்பு நிலைத்தன்மை வாய்ந்தவை என்பதை இச் சடங்குகளை விமர்சிப்பவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் இவர்களது அரசியலையும் நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் "காலனியம் நம்மைத்திருத்தப் படவேண்டிய கீழைத் தேயமாகவும் (Occident) கட்டமைத்து உருவாக்கிய கதையாடல்களை நாமறிவோம். இதன் பொருள் நம்முடைய மற்றமையை (Arterity) அங்கீகரிப்பது அல்ல நமது மற்றமையைக் கீழானதாக, திருத்தப் பட வேண்டிய ஒன்றாக, இயல்பிலிருந்து (Norm) விலகியதாகச் சித்தரிப்பதே" ( மாக்ஸ். அ. 1997, பக்.16). அதேவேளை இவர்கள் புராதன பண்பாட்டுக் கலை நடவடிக்கைகள் தங்களுடைய இருப்புக்கும், மேலாண்மைக்கும்

தேவையாக இருப்பின் அவற்றை முன்னின்று பாதுகாப்பவர்களர்களாக காட்டிக் கொள்வ தோடு அதற்காக பல நியாயப் பாடுகளையும் முன்வைப்பார்கள்.

"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால உழைப்பும் சிந்தனையும் நம்மிடம் கொண்டு வந்து சேர்த்த சிந்தனைக் களஞ்சியத்தில் என்றும் அழியாத மதிப்புடைய அம்சங்களும் உள்ளன. அவை ஒருபோதும் அழியா, அவற்றை நாம் அழிய விடவும் கூடாது. அவற்றின் மதிப்பு பற்றிய உணர்வு இல்லாமல் போனதுதான் பூர்ஷ்வா ஆட்சி ஏற்படுத்திய சீரழிவின் முக்கிய அறிகுறியாகும். பூர்ஷ் வாக்களுக்கு அனைத்துமே வர்த்தகப் பொரு ளும் போர்க் கருவியும்தான். சமுதாயத்தில் அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் வென் றெடுத்த பிறகு அழிக்கப்பட்ட ஆன்மீகச் செல்வங்களைத் தானும் மனித குலம் திரும்பப் பெறுவதற்கான போராட்டக் கடமையை மேற்கொள்ள வேண்டும்" ( ராஜதுரை.எஸ்.வி. ...............பக். 78-79).

எனவே புராதன விடயங்களை அணுகும் போது அவற்றின் பொருளாதார, வரலாற்றுச் சமூகச் சூழமைவுகளின் பின்னணி யினையும் அவை பெற்றிருந்த முக்கியத்துவத் தினையும் நாம் காணத்தவறக் கூடாது என்பதுடன் நவீன விடயங்களின் உள்வாங் கலையும் யாந்திரிகத்தனமாக இல்லாமல் சமூகப் புரிதலுடன் உள்வாங்கப்படவும் வேண்டும். அப்போதுதான் நவீன சவால் களுக்கான எமது தத்துவார்த்த தளத்தினை உருவாக்கிக் கொள்ளலாம். அதுவே சமூகப் பயன்பாடுடையதாகவும் அர்த்தமுடைய தாகவும் இருக்க முடியும். இதைவிடுத்து வேறோர் சமூகத்தில் எழுந்த சிந்தனைகள் அவை எவ்வாறான உயர்ந்த சிந்தனைகளாக இருந்த போதும் எமது சமூகப் பொருளாதார நிலை மையினையும் அதனடியாக எழுந்த பண்பாட்டையும் கணக்கெடுக்கத்தவறுமாயின் அவை வெறும் வறட்டுச் சூத்திரங்களாகத்தான் இருக்க முடியும். இந்த அடிப்படையில் சமூக நலன் விரும்பிகளும் புத்திஜீவிகளும் தமிழர்களின் பாரம்பரியச் சடங்குகள், பாரம்பரியக் கலைகள் தொடர்பாக முற்கற்பிதம் இன்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.







### உசாத்துணை நூல்கள்


- இராஜதுரை. எஸ்.வி. அந்தோனியோ கிராம்ஷி, (இணை) வாழ்வும் சிந்தனையும், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1991.
- ஏங்கெல்ஸ் ஃபிரடெரிக், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
- சிவசுப்பிரமணியன், ஆ., மந்திரமும் சடங்குகளும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2010.
- மார்க்ஸ், அ., உடைபடும் புனிதங்கள், விடியல் பதிப்பகம், சென்னை, 1997.
- சட்டோபாத்யாயா தேவிபிரசாத், உலகாயதம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
- பரமசிவன். தொ., பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2013.
- முத்தையா. இ., அடித்தள மக்களின் குறியீட்டுப் பயண வெளிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2013.









# மட்டக்களப்புத் தமிழரின் உணவுப் பழக்கவழக்கங்கள்

ஒரு குழுமத்தின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்துவதிலே அவர்களது உணவுப் பழக்கவழக்கங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் அவர்கள் தமக்கான உணவைத் தேடும் முறை, அவற்றைத் தயாரித்தல், உண்ணுகின்ற முறை, உணவு வகைகள், பரிமாறும் முறை எனப் பல்வேறு அம்சங்கள் இதனுள் அடங்கும்.

அந்த வகையில் ஈழத்துத் தமிழர்கள் தனித்துவமான பண்பாட்டுத் தனித்துவத்தைக் கொண்டவர்களாகப் பேசப்படுகின்ற அதே வேளை அவர்களுக்குள்ளே பிரதேச, மத வேறுபாடுகளுக்கு ஏற்ப தனித்துவமான உபபண்பாட்டு அம்சங்களைக் கொண்டும் விளங்குகின்றனர். அந்தவகையில் மட்டக் களப்புத் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளம் பற்றிப் பேசுகின்ற போது அவர்களது உணவுப் பழக்கவழக் கங்களும் முக்கியம் பெறுகின்றன.

**அன்றாட உணவுப் பழக்கவழக்கங்கள் :**

நிலமானிய விவசாயப் பொருளாதார அமைப்பைக் கொண்ட மட்டக்களப்பு மக்களின் மூன்று நேர உணவாக நெல்லரிசிச் சோறே அமைந்தது. சிலபோது அரிசியைக் கொண்டு வேறுசில உணவுகளையும் சமைத்து உண்டனர்.

இப்பிரதேச மக்கள் காலையில் பெரும்பாலும் பழஞ்சோற்றை விரும்பி உண்ணும் பழக்கத்தை உடையவர்கள். இச்சோற்றைத் 'தண்ணிச்சோறு' என்று கூறுவர். இரவில் சமைத்த உணவின் மீதியைக் காலை உணவுக்கு வைக்கும்போது சோற்றுப் பானையினுள் தண்ணீரை ஊற்றி வைப்பர். காலையில் அத்தண்ணீரோடு சேர்த்து தேங்காய்ப்பால் அல்லது தயிரைச் சேர்த்துப் பிசைந்து உண்பர். இவர்கள் தண்ணீர்ச் சோற்றை உண்ணதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அதிகாலையில் வயலுக்குச் செல்பவர்களுக்கு புதிதாகச் சமையல் பண்ணுவதற்கு கால அவகாசம் இருப்பதில்லை என்பது ஒரு காரணம். அடுத்தது தண்ணீர்ச் சோறு உடலுக்குக் குளிர்ச்சியையும் ஆரோக் கியத்தையும் தருவதோடு பசியை நீண்டநேரம் தாக்குப் பிடிக்கும் என்பதும் அவர்களின் கருத்து. தண்ணீர் ஊற்றிவைக்கும் பழஞ்சோறு காலையில் மிகவும் குளிர்ச்சித் தன்மையாக இருக்கும். இத்தகைய உணவு வெயிலில் வயல் வேலை செய்பவர்களுக்கு ஏற்ற உணவாக அமைகின்றது.

சிலபோது சோற்றினுள் தண்ணீர் ஊற்றாமல் வைத்திருந்து காலையில் அந்தப் பழஞ்சோற்றுடன் பழைய கறியையோ அல்லது தேங்காய்ப்பால் அல்லது தயிரைச் சேர்த்தும் உண்பதுண்டு. காலையில் உண்ணும் பழங்கறி பெரும்பாலும் குழம்பு, நசியல் கறிகளாகவே இருக்கும். சில நாட்களில் காலையில் சுடுசோறு அல்லது குறுனல் அரிசிக் கஞ்சி சமைப்பதும் உண்டு. சுடுசோற்றைச் சுண்டலோடு அல்லது பசுநெய்யோடு அல்லது பால், தயிரோடு உண்பர். சற்று ஓய்வு நாட்களிலேயே சுடுசோறு சமைப்பதுண்டு. கஞ்சி பச்சை அரிசிக் குறுனலில் தேங்காய்ப்பால் அல்லது பசுப்பால் சேர்த்துக் காய்ச்சுவர்.

இரவுச் சாப்பாட்டிலும் மத்தியானச் சாப்பாட் டிலும் சுண்டல் / பொரியல், குழம்பு, சொதி (இதனை ஆணம் என்று கூறுவர்) என்பன பிரதான கறிவகைகளாக அமையும். அதிலும்

கலாநிதி சி.சந்திரசேகரம்

குழம்பும், சொதியும் மிகவும் பிரதானமானவை. சுண்டல் பெரும்பாலும் இயற்கையாகக் கிடைத்த தாவர இலை குழைகளைக் கொண்டதாக அமையும். சுண்டலுக்கு மீனையும் சேர்த்துச் சுண்டுகின்ற வழக்கம் இங்குண்டு. திராய், பாகை முதலானவற்றிற்குக் குறிப்பிட்ட வகை மீன் சேர்த்துச் சுண்டுவர். மரக்கறிச் சொதி சமைக்கும் போதும் அதனுள் மச்ச வகைகளைக் கலந்து சமைப்பதும் வழக்கமாகும்.

சோற்றை உண்ணும்போது கறி வகைகளை ஒரு ஒழுங்குமுறையிலே ஒன்றன் பின் ஒன்றாகத் தனித்தனியே உண்பது மட்டக் களப்பு மக்களின் வழக்கமாகும். முதலில் சுண்டல், பொரியலும் பின்னர் குழம்பையும் அதன் பின்னர் வெள்ளைக் கறியும் இறுதியில் சொதியையும் உண்பது வழக்கமாகும். பல கறியையும் சேர்த்து உண்டால் ஒவ்வொரு கறியினதும் தனித்துவச் சுவை கெட்டுவிடும் என்பது இவர்களின் கருத்து. இரவுச் சாப்பாட்டில் இறுதியில் தயிரோடு உண்பர். உண்ட பாத்திரத் தைக் கழுவிய பின்னர் அதனுள் புதிதாகச் சோறு வைத்துத் தயிரிட்டு உண்பதே வழக்க மாகும். முக்கியமாக மச்சக் கறியுடன் உண்டால் கட்டாயம் பாத்திரத்தை நன்கு கழு விய பின்னரே தயிரோடு சாப்பிட வேண்டும் என்பது ஒரு கட்டுப்பாடாகவே பின்பற்றப் படுகிறது.

பாலையும் தயிரையும் அவர்கள் மிகவும் புனிதம் மிக்கவையாகக் கருதுகின்றனர். மச்சம், மாமிசம் சாப்பிட்ட பின் பாலோடு சாப்பிட வேண்டி ஏற்பட்டாலும் உண்ட பாத்திரத்தை நன்கு கழுவிய பின்னரே புதிய சோற்றுடன் பாலைக் கலந்து சாப்பிடுவர். பாலையோ, தயி ரையோ சோற்றினுள் வைத்த பின்னர் அதன் மேல் உப்புத் தெளிக்க மாட்டார்கள். அவ்வாறு பாலிலோ, தயிரின் மேலோ உப்பைத் தெளித் தால் குறித்த பசுவிக் கண்களில் இருந்து நீர் வழிந்து கொண்டிருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. பால் காய்ச்சு வதற்கும் தயிர் உறைய வைப்பதற்கும் தனித் தனியான மண் சட்டிகள் வைத்திருப்பர். அவற்றை மச்சம், மாமிசம் படாதவாறு கவனமாகப் பேணுவர். இவையெல்லாம் பாலைப் புனிதப் பொருளாகப் பேணுவதன் அடையாளங்களாகவே உள்ளன. தேவைக்கதிகமாக தயிர் இருக்கும் சந்தர்ப்பங் களில் அதனைச் சுத்தமான வெள்ளைத் துணி யினுள் வைத்து முடிச்சாகக் கட்டி வீட்டினுள் தொங்கவிடுவர். இத்தயிரிலே இருக்கும் தண்ணீரெல்லாம் வடிந்து கட்டியாகி அது பல நாட்களுக்கு பழுதபடாமல் இருக்கும். தயிர், பால் கிடைக்காத வேளைகளில் இந்தத் தயிர்க் கட்டியைப் பயன்படுத்துவர். பெரும் பாலும் தண்ணீர்ச் சோற்றுக்கு இதனைப் பயன்படுத் துவதுண்டு.

உணவை உண்ணும் போது சில ஒழுக்கமுறைகளைக் கடைப் பிடிக்கும் மரபும் இவர்களிடம் இருந்துவந்தது. முக்கியமாக உணவை உண்ணும்போது சோற்றுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. சோறு தம்மை வாழவைக்கும் தெய்வம் என அவர்கள் கருதினர். அதனால் அவர்கள் நெல், அரிசி, சோறு என்பவற்றைத் தெய்வ நிலையில் கருதினர். அவற்றைக் காலால் மிதித்தல், வீசுதல் ஆகிய செயல்களை சம்பிரதா யத்துக்கு மாறான செயல்களாகக் கருதினர். அந்த அடிப்படையில் சோற்றை உண்ணும் போது கதைத்தல், சிரித்தல், அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு சாப்பிடல், உண்ணும்போது பாத்திரத்தை அரைகுறையில் விட்டுவிட்டுப் போதல், சோற்றுப் பாத்திரத்தைக் காலால் மிதித்தல், தூக்கி எறிதல் முதலிய செயல்களை ஒழுக்கமற்ற நடத்தைகளாகக் கருதினர். சோற்றைப் பாத்திரத்தில் போட்டவுடன் எடுத்துச் சாப்பிட வேண்டும், அதனைக் காக்கவைக்கக் கூடாது என்றும் கருதினர். நம்பிக்கையின்

பேரிலே கடைப் பிடிக்கப்படுகின்ற இந்த நடத்தைகள் பல உள்ளார் ந்த சுகாதார மற்றும் அறிவியல் சார்ந்த உட் பொருள்களைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்க உதாரணமாக சோற்றை வாயினுள் வைத்துக் கொண்டு கதைக்கின்ற போது அல்லது சிரிக்கின்ற போது வாயினுள் இருக்கும் சோறு பக்கத்தில் இருப்பவருக்குச் சிந்துதல், மூச்சுக்குழாயினுள் உணவு சென்று மூச்சுத் திணறுதல், புரைக் கேறுதல் முதலிய தீய விளைவுகள் ஏற்படு கின்றன.

மேற்படி அன்றாட உணவுப் பழக்க வழக்கங்களைத் தவிர பிள்ளைபெற்ற தாய், ருதுவாகிய பெண் ஆகியோருக்கும் சில விசேட வைபவங்களின்போதும் வழங்கப் படுகின்ற உணவு வகைகளும் முறைகளும் மட்டக் களப்புத் தமிழரின் உணவுப் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாகும்.

**பிள்ளை பெற்ற தாய்க்கான உணவுகள் :**

பிள்ளை பிறந்த அன்று தாய்க்கு அசமதாகம் சேர்த்த கோப்பி கொடுக்கப்படும். உப்பு விஸ்கட்டும் கொடுப்பர். வேறு உணவுகள் கொடுப்பதில்லை. பின் ஐந்தாம் நாள்வரை 'மிளகுதண்ணிக்' கறியோடு ஒரு நேரச் காப்பாடு காலை 11 மணியளவில் கொடுக்கப்படும். 'மிளகு தண்ணிக்' கறி என்பது மிளகு, வெள்ளைப் பூடு, கொறுக்கா, உரலில் குற்றிய செத்தல் மிளகாய், நெருப்பில் சுட்ட சிறிய 'கொட்டைத் தேங்காய்' கட்டி என்பவற்றை ஒன்றாக அரைத்து அக்கூட்டை செத்தல், கிளக்கன் முதலான கிரந்தி இல்லாத மீனோடு சேர்த்துச் சமைப்பதாகும். கைக்குத்தரிசியே சோற்றுக்கு எடுக்கப்படும். அரிசியை சுளகில் தெள்ளி நடு அரிசிசை எடுத்துச் சமைப்பர். ஐந்தாம் நாளில் இருந்து பன்னிரெண்டாம் நாள் வரை 'மிளகுதண்ணிக்' கறியோடு இருநேர (பகலும் இரவும்) உணவு கொடுக்கப்படும். பன்னி ரெண்டாம் நாள் தாய்க்குப் பச்சைத் தண்ணீர் வார்த்து அதன் பின்னர் காலைச் சாப்பாடாக தண்ணீர்ச்சோறு கொடுக்கப்படும். தேங்காய்த் தண்ணீர்ப் பாலில் பழஞ்சோற்றைப் பிசைந்து உண்ணக் கொடுப்பர். பன்னிரெண்டாம் நாள் தொடக்கம் முப்பத்தியோராம் நாள்வரை மூன்று நேரச் சாப்பாடு கொடுக்கப்படும். பகலும் இரவும் 'மிளகுதண்ணிக்' கறியோடு சோறு கொடுப்பர். இந்த 'மிளகுதண்ணிக்' கறியை தேங்காய்த் தண்ணீர்ப் பாலில் சமைப்பர்.

பதினைந்தாம், இருபதாம், முப்பதாம் நாட்களில் தலையில் பச்சைத் தண்ணீர் வார்ப்பதனால் காலையில் தண்ணீர்ச்சோறு கொடுப்பதில்லை. பகல், இரவுச் சாப்பாட்டிற்கு முன் சிறிதளவு மதுபானம் கொடுக்கும் வழக்கமும் இருந்தது. இது உள் காயங்களை ஆற்றும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

முப்பத்தியோராம் நாளுக்குப் பின்னர் செத்தல் மிளகாயை அரைக்காமல் மிளகாய்த் தூளும் கொறுக்காயும் போட்டு 'மிளகு தண்ணிக்' கறி சமைத்துச் சோறு கொடுப்பர். எண்ணெய், கிரந்தி, குளிர் சாப்பாடுகளை அவர்கள் தவிர்த்துக்கொள்வர்.

**சாமர்த்தியம் அடைந்த பெண்ணுக்கான உணவுகள் :**

சாமர்த்தியம் அடைந்த அன்று குறித்த பெண்ணுக்கு உணவு கொடுப்பதில்லை. குடிப்பதற்குக் கோப்பி கொடுப்பதுண்டு. வேம்பு இலைத் தளிரை அரைத்து அல்லது வேப்பெண் ணெய்யைக் குடிக்கக் கொடுப்பர். அன்றிரவு தண்ணீர் வார்த்த பின்னர் கோழிமுட்டை, நல் லெண்ணெய், மஞ்சள் தூள் என்பவற்றைச் சேர்த்து அடித்துக் கொடுப்பர். இவ்வாறு ஏழு அல்லது ஒன்பது தியாலங்கள் அதாவது மூன்று அல்லது நான்கு நாட்கள் கொடுப்பர். சிவப்பு அரிசி அல்லது சீனட்டி எனப்படும் நெல்லரிசியில்

(பச்சை அரிசி) மாவிடித்து அதிலே பிட்டு அவித்து சுத்தமான வெள்ளைத் துணியினுள் அப்பிட்டை வைத்து அதனுள் நல்லெண்ணெய் இட்டுக் கட்டி பெண்ணின் உடம்பெல்லாம் ஒற்று இடுவர். பின்னர் அப்பிட்டைச் சாப்பிடக் கொடுப்பர். ஒன்று தொடக்கம் ஐந்து நாள்வரை உணவிலே உப்புச் சேர்க்கமாட்டார்கள். ஐந்தாம் நாள் உப்புச் சேர்ப்பர். அன்றைய தினம் முருங்கை இலையை வறுத்து செத்தல் மிளகாயை அதனுள் கிழித்துப் போட்டுச் சுண்டிக் கொடுப்பர்.

ஆறாம் நாளில் இருந்து முப்பத்தியோராம் நாள்வரை மிளகுதண்ணிக் கறியோடு சோறு கொடுப்பர். பிஞ்சு அவரை, குழல் அவரை, பிஞ்சுக் கத்தரிக்காய் என்பவற்றில் மிளகு தண்ணிக் கறி சமைக்கப்படும். இதற்குள் தண்ணீர், மிளகு, வெள்ளைப்பூடு, கொறுக்கா, சிறிது உப்பு, செத்தல் மிளகாயைக் கிழித்து உரலில் போட்டு இடித்த தூள் என்பன சேர்க்கப்படும். இக்கறி தேங்காய்ப் பால் இன்றிச் சமைக்கப்படும். கோழி முட்டையை நல்லெண் ணெய்யில் பொரித்தும் கொடுப்பர். முட்டை யைத் தவிர மீன், இறைச்சி வகைகள் எதுவும் கொடுக்கப்படுவதில்லை.

பத்தாம் அல்லது பதினைந்தாம் நாளிற்குப் பின்னர் எள் துவைத்து அதனுள் பனங்குட்டான் சேர்த்துச் சிறு உருண்டைகளாக்கி இடைச் சாப்பாடாக உண்ணக் கொடுப்பர். உழுந்தை வறுத்துக் குற்றி அதனையும் இடைச் சாப்பாடாகக் கொடுப்பர். முப்பத்தியோராம் நாளில் தேங்காயும் சேர்த்து விரும்பிய உணவு சமைத்துக் கொடுப்பர்.

**திருமண உணவு :**

மாப்பிள்ளை கேட்டுச் செல்வதற்கு முதல் நாள் பெண்வீட்டாரின் இனசனத்தார் பலகாரங்கள் செய்து பெட்டியில் கட்டிக் கொண்டுவந்து பெண்வீட்டில் கொடுப்பது மரபாக இருந்தது. அந்தப் பலகார வகைகளோடு பெண்வீட்டார் தாமும் பலகாரங்கள், கொழுக் கட்டை என்பவற்றைச் செய்து எல்லாவற்றையும் ஏழு அல்லது ஒன்பது பெட்டிகளிலே வைத்து வெள்ளைத் துணியால் கட்டி மாப்பிள்ளை கேட்டுச் செல்லும் போது கொண்டு செல்வர்.

திருமண நாளுக்கு முதல் நாள் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு 'கா' (சுமை எனப் பொருள்படும்) கொண்டு செல்வது மரபாகும். அதாவது வாழைக்குலை, தேங்காய், தயிர்ப்பானை, அரிசி முதலிய உணவு வகைகளைக் கட்டிக் கொண்டு மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுப்பர்.

தாலி கட்டிய பின்னர் தம்பதியருக்குப் பால்பழம் கொடுத்தல் இடம்பெறும். முதலில் மாப்பிள்ளை மணமகளுக்கும் பின்னர் மணமகள் மாப்பிள்ளைக்கும் பால், பழம் உண்ணக் கொடுப்பர். இதன் பின்னர் 'கலத்தில் போடுதல்' இடம்பெறும். அரிக்கனில் சோற்றைப் போட்டு அதனை மணமகளிடம் கொடுக்க அவர் மணமகனுக்கு இடப்பக்கமாக நின்று கிழக்குப் பக்கம் பார்த்து சேவரக்காலில் வைக்கப் பட்டிருக்கும் 'பூதாக்கலம்' எனப்படுகின்ற வட்டியில் சோறு சிந்தாத வண்ணம் கொட்டுவார். அதன்மேல் ஏழு மரக்கறிகள் கொண்டு சமைக்கப்பட்ட கறி, வாழைக்காய்ப் பொரியல், தயிர், கூழ், பெரிய பலகாரம் மூன்று என்பன வைக்கப்படும். பின்னர் மணமகன் சிறிது சோற்றை ஏனைய பண்டங்களுடன் சேர்த்துப் பிசைந்து மணமகளுக்கு மூன்று தடவை ஊட்டுவார். பின்னர் அவ்வாறே மணமகள் மணமகனுக்கு ஊட்டுவார். பின்னர் படிக்கன் எனப்படும் பாத்திரத்தில் மாறிமாறிக் கையைக் கழுவுவர். இதனையடுத்து வெள்ளை போட்ட வட்டாவில் வைக்கப்பட்டுள்ள பாக்கு, வெற்றிலையை எடுத்து மணமகன் மணமகளுக்கு ஊட்ட பின் மணமகள் மணமகனுக்கு ஊட்டுவார்.

திருமண வீட்டிலே பெரிய பந்தல் போட்டு அதனைச் சுற்றிச் சீலை கட்டி அதனுள்ளே திரு மணத்திற்கு வந்தவர்களை ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் வரிசை வரிசையாக இருத்தி வாழையிலை போட்டு உணவு பரிமாறுவர். திரு மணச் சாப்பாட்டிலே மரக்கறிகளோடு ஆடு, மான், மரை முதலிய மிருகங்களின் இறைச்சியும் கறியாகச் சமைக்கப்படும். இறுதியில் தயிரும் பரிமாறப்படும்.

மணமகனின் தாய், தந்தையரை மணமகளின் தாய், தந்தையர் தனியாக அழைத்துச் சென்று பாயில் வெள்ளை போட்டு அமரச் செய்து செம்பு, வட்டா என்பன வைத்து உணவு பரிமாறுவது வழக்கமாகும். திருமணத் திற்கு வருபவர்கள் தம்பதியருக்கு அரிசி, தேங்காய் முதலிய அன்றாட உணவுப் பொருட் களை பெட்டியில் வைத்து வெள்ளைத் துணியால் கட்டி பரிசாக வழங்குவது முன்னர் வழக்கமாக இருந்தது.


திருமணத்தின் பின்னர் குறித்த ஒரு நாளிலே மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண் வீட்டார் விசேட சாப்பாடு வழங்குவதும் வழக்க மாக இருந்தது. திருமணத்தின் பின்னர் பெண்வீட்டார் தம்பதியருக்கு ஆறு மாதச் சாப்பாடு கொடுப்பது மரபாக இருந்து வந்தது. அத்தோடு ஒரு போக வேளாண்மையும் தமது செலவில் செய்கை பண்ணியும் கொடுத்தனர். குறித்த ஆண் சுயமாக உழைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டே இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

**சித்திரைப் புத்தாண்டு தினம் :**

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று பலாக்காய் கறி சமைப்பது வழக்கமாக உள்ளது. பிஞ்சுப் பலாக்காயைச் சற்றும் பெரிய துண்டுகளாக வெட்டி வெள்ளைக் கறி அல்லது சொதி வைப்பது வழக்கம். குறிப்பாக பிச்சுப் பலாக்காய் (உள்ளே சுளைகள் அற்ற) பிஞ்சு விரும்பிச் சமைக்கப்படுகின்றது. அன்றைய தினம் பாகற் காயும் ஒரு கறியாக அல்லது சுண்டல்/ பொரியலாக இடம்பெறும். வருடப் பிறப்பு தினத்தன்று இனிப்புப் பண்டங்கள் அதிகம் உட்கொள்வதால் வயிற்றுக் கோளாறுகளைப் போக்குவதற்காக பாகற்காய் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. சுரக்காயும் அன்று சமைப்பதுண்டு.

மட்டக்களப்புத் தமிழரது உணவுப் பழக்கவழக்கங்களை நோக்குகின்றபோது அவற்றினுள்ளே பல அறிவியல் அர்த்தங்கள் பொதிந்திருப்பதைக் காணமுடியும். முக்கியமாக தமது ஆரோக்கியமான வாழ்வினை அடிப்படை யாகக் கொண்டு இந்த வழக்கங்களை அவர்கள் வகுத்துக்கொண்டுள்ளமை தெரிகின்றது. சில நம்பிக்கை என்ற போர்வையிலே பின்பற்றப் படினும் அவற்றிலே உள்ளார்ந்தரீதியில் அறிவியல் நோக்கு செயற்படுவதைக் காணமுடியும். இன்று எமது உணவுகளும் உணவுப் பழக்கவழக்கங்களும் நம்மை ஆரோக்கிய மற்றவர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்ற சூழலில் எமது பழைய உணவுப் பழக்கவழக்கங்களைச் சற்றுத் திரும்பிப் பார்க்கவேண்டிய தேவை எமக்குண்டு.

**குறிப்பு:** மட்டக்களப்புத் தமிழ் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிய இந்த விபரிப்புக் கட்டுரை குறித்த ஒரு பிரதேசத்தை (மண்டூர் பிரதேசம்) மட்டும் அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்ட சில வழக்குகள் வேறுசில ஊர்களின் வழக்குகளோடு முரண்படலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.


மாருதி. 0778842223